செ.வெ.எண்.: 575

<u>செய்தி வெளியீடு – 9–7–2010</u>

தமிழ்நாட்டிலுள்ள தென்னை மற்றும் பனை மரத் தொழிலாளிகளின் பல்வேறு கோரிக்கைகளை ஆராய்ந்து, அவற்றின் மீது பரிந்துரை செய்ய அரசாணை எண் 57, (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) நாள் 3–6–2009 அன்று நீதியரசர் திரு.கே.பி. சிவசுப்பிரமணியன் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழுவில் நீதியரசர் மற்றும் ஏழு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இந்தக் குழு தனது ஆய்வினை முடித்துக் கொண்டு அரசுக்கு கடந்த 1–7–2010 அன்று தனது அறிக்கையை வழங்கியுள்ளது. இந்தக் குழுவின் பரிந்துரைகளை ஆய்ந்த போது, அந்த அறிக்கையில் ஒரு மனதான முடிவு எட்டப்படவில்லை என்பதும், மாறுபட்ட கருத்துக்கள் அதன் உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதும், தென்னை மற்றும் பனை மரத் தொழிலாளர்களின் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்து ஒருமித்த கருத்து ஏற்படவில்லை என்பதும் தெரிய வந்துள்ளது.

குறிப்பாக கள் இறக்க அனுமதி கொடுப்பது பற்றி இரண்டு உறுப்பினர்கள் அதற்கு அனுமதி வழங்கலாமென்றும், ஆறு உறுப்பினர்கள் அதற்கு எதிராக தற்போது அனுமதி வழங்கக் கூடாதென்றும் கருத்து தெரிவித்திருக்கிறார்கள்.

மேலும் இந்தக் குழு கேரள மாநில நிலைமைகளை மட்டுமே ஆய்வு செய்து – அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளதால், ஆந்திரா மற்றும் கர்நாடக மாநிலங் களிலே உள்ள நடைமுறைப் பழக்கங்களையும் ஆய்ந்து அந்த விவரங்களையும் இணைத்து அதன் அடிப்படையில் தென்னை மற்றும் பனைத் தொழிலாளர்களுக்கு எத்தகைய நலத் திட்டங்களை செயல்படுத்தலாம் என்பது பற்றியும் – கள் இறக்க அனுமதிப்பதால் பொது மக்களிடையே குறிப்பாக மகளிரிடையே ஏற்படும் சமூகப் பொருளாதாரப் பாதிப்புகள் பற்றியும் – இந்தத் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்க மாற்று வழிகள் பற்றியும் ஆய்வு செய்ய வேண்டியுள்ளது.

எனவே நீதியரசர் சிவசுப்பிரமணியம் அவர்கள் தலைமையிலே நியமிக்கப்பட்ட குழுவின் சார்பில் தரப்பட்ட அறிக்கை ஏகமனதாக இல்லாத நிலையில், இந்த அறிக்கையின் பரிந்துரைகள் பற்றித் தலைமைச் செயலாளர் தலைமையில், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் மூலம் விரிவாக ஆய்ந்து, இதன் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை அரசுக்குத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

* * * * *

வெளியீடு, இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை –9